# அநுஷ்டானம் - ஸ்நாந விதி

கால்அலம்பி இருமுறை ஆசமனம் பண்ண வேண்டும்.

ப்ராணாயாமம் பண்ணி "ஓம் அஸ்மத் குருப்யோ" முதல் "தமாச்ரயே வரையிலும்" பின் "ஹரிரோம் தத்" முதல் அன்றைய திதி வார நக்ஷத்திரங்கள் கூறி "ஸ்ரீ பகவதாஜ்ஞயா ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம்" வரையில் சொல்லிக் கொண்டு

"அக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவத அபசாராதீனாம் நாநாவிதானாம் ஸர்வேஷாம் பாபானாம் ஸத்ய: அபநோதன த்வாரா நித்ய நைமித்திக கர்மண்யதா ஸித்யர்த்தம் * ... ப்ராத: ஸ்நாநம் அஹம் கரிஷ்யே".

இந்த இடத்தில் விசேஷமாக : "க்ஷேத்ரே ... விமானச் சாயாயாம் ... ஸ்வாமி ஸந்நிதௌ ... மஹா நத்யாம் அல்லது புஷ்கரிண்யாம் " என்று க்ஷேத்ராடனங்களில் அந்தந்த க்ஷேத்திரத்து பெருமாள் திருநாமம், புஷ்கரிணி திருநாமங்களை விசேஷமாகச் சேர்த்துச் சொல்லலாம்.

வழக்கம்போல் வடகலையார் மட்டும் ஸாத்விகத்யாகம்.

மேற்கொண்டு ஸ்நாநத்தில் உள்ள விசேஷ மந்திரங்கள் பிறகு சேர்க்கப்படும். இதுவரை சொன்னவற்றைச் செய்வதே விசேஷ ஸ்நாநமாகக் கொள்ளலாம்.

<u>அநுஷ்டானம் - புண்ட்ர தாரணம்</u>




<u>திருமண் ஸ்ரீசூர்ணம் இடும் முறை படங்களுடன்.</u>






நெற்றியில் தொடங்கி நடு வயிற்றில் இரண்டு, நடு மார்பு3, நடுகழுத்து4, வலது5,6,7 இடது - 8,9,10 பின்புறம் 11 மற்றும் 12வது திருமண் காப்பு இடப் பட்டுள்ளதை கவனிக்கவும். ஸ்ரீசூர்ணமும் இதே க்ரமத்தில்தான் தரிக்கவேண்டும். கீழே....



. நெற்றி முதல் நடு பாகம் வரை



அடுத்து வலது புறம் இடப்பட்டுள்ளது





அடுத்து இடது புறம் இடப் பட்டு, அடுத்த படத்தில் பின்புறம் உள்ள இரு இடங்கள் இடப்படுகிறது.

இவற்றை தரிக்கும்போது சொல்ல வேண்டிய பகவன் நாமாக்கள் கீழே இதே க்ரமத்தில் தரப்பட்டுள்ளன.

திருமண் காப்பு செயல் முறை விளக்கம் :- உத்தரிணியால் ஜலம் எடுத்து இடது கையை "ஓம் வீர்யாய அஸ்த்ராய பட்" என்று அலம்பி "ஓம் ஜ்ஞானாய ஹ்ருதயாய நம:" என்று சிறிது தீர்த்தம் எடுத்துக் கொண்டு "உத்ருதாஸி வராஹேண க்ருஷ்ணேன சத பாஹுநா" என்று திருமண்ணை எடுத்து "பூமிர் தேனுர்தரணி லோக தாரிணி" என்று ப்ரணவம் சொல்லி கையில் வைத்து"கந்தத்வாராம் துராதர்ஷாம் நித்யபுஷ்டாம் கரீஷிணீம் ஈச்வரீம் ஸர்வ பூதாநாம் த்வாமிஹோபஹ்வயே ச்ரியம்" என்று குழைத்து மீண்டும் "வீர்யாய அஸ்த்ராய பட்" என்று ரக்ஷை செய்து "ஓம் க்ஷ்ரௌம்" என்று மந்திரித்து, "பகவான் பவித்ரம் வாஸுதேவ: பவித்ரம் சததாரம் ஸஹஸ்ரதாரம் அபரிமிததாரம் அச்சித்ரம் அரிஷ்டம் அக்ஷய்யம் பரமம் பவித்ரம் பகவாந் வாஸுதேவ: புநாது" என்று பவித்ர மந்த்ரம் சொல்லவேண்டும்.

பின்னர் ஆட்காட்டி விரல் அல்லது மோதிர விரலால் இட்டுக்கொள்ள வேண்டும் என்பது சாஸ்திரம் ஒழுங்கு அழகு கருதி ஈர்க்கால் இட்டுக்கொள்ளப் படுகிறது. படத்தில் காட்டிய வரிசைப்படி கீழ்க்கண்ட நாமாக்களை உச்சரித்து இட்டுக்கொள்ளவும்.

1. கேஸவாய நம:
2. நாராயணாய நம:
3. மாதவாய நம:
4. கோவிந்தாய நம:
5. விஷ்ணவே நம:
6. மதுசூதநாய நம:
7. திரிவிக்ரமாய நம:
8. வாமநாய நம:
9. ஸ்ரீதராய நம:
10. ருஷிகேசாய நம:
11. பத்மநாபாய நம:
12. தாமோதராய நம:

பாக்கி உள்ள திருமணை வலது கையாலேயே "வாஸுதேவாய நம:" என்று உச்சந்தலையில் தடவிக்கொள்வது சிஷ்டாச்சாரம்.



ஸ்ரீசூர்ணம் குழைத்து முன்புபோலவே பவித்ர மந்திரத்தால் ரக்ஷை செய்து கொண்டு திருமண் இட்ட வரிசையிலேயே ஸ்ரீசூர்ணத்தையும் இடையில் இடவேண்டும். அதற்கான தாயார் நாமங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. ஸ்ரீயை நம:
2. அம்ருதோத்பவாயை நம:
3. கமலாயை நம:
4. சந்த்ரஸோதர்யை நம:
5. விஷ்ணுபத்ந்யை நம:
6. வைஷ்ணவ்யை நம:
7. வராரோஹாயை நம:
8. ஹரிவல்லபாயை நம:
9. சார்ங்கிண்யை நம:
10. தேவதேவிகாயை நம:
11. ஸுரஸுந்தர்யை நம:
12. மஹாலக்ஷ்ம்யை நம:

முன்பு திருமண் மீந்ததை உச்சந்தலையில் இட்டுக்கொண்டது போல ஸ்ரீசூர்ணம் மீந்ததையும் உச்சந்தலையில் "ஸர்வாபீஷ்ட பலப்ரதாயை நம:" என்று இட்டுக் கொள்ளவேண்டியது

# How to wear a PANCHA KACHCHAM - with mantras.

## Wearing the Veshti as per the orthodox way.

## VASTHRA DHARANAM - Dharana Mantra.

**Prokshanam to be made on the 'vasthram' by saying**

***"Om Bhoorbhuvassuvaha Suseevo havya maruthaha suseenaam | Ruthena sathyam Ruthasaapa aayan | Susijanmaanaha suchayaha paavakaaha || "***

**After prokshanam take all the vasthram in hands and show them to Sun (light) and say:**

***"Udhuthyam jaadhavedhasam devam vahanthi kethavaha, dhruse visvaaya suryammm" :***

**Then shake down the vasthram by saying :**

***"Avadhoodham Rakshaha Avadhoodha Aradhayaha " |***

**Then tie the samll vasthram 'uthriyam' round the head.**
**Role the 'poonal' in the right ear. And say:**

***"Avahanthi vidhanvaanaaha Kurvaanacheeram athmanaha |***
***Vaasagumsi mamaghavachcha anna paanecha sarvadha |***
***Thathome sriyamaavaha |"***

**Wear 'Kaubeenam' (Komanam or Jatty) and remove the wet cloth.**

**Now start wearing the big / long veshti (vasthram) following these steps.**



**Hold the vasthram putting it behind you by left hand at one end and at 6th feet by right hand. Measure exactly 3 feet from that left end Hold the new point ( 3 feet) by left hand by leaving the end move round the left hand to the point 3 inches up and 3 inches right to the 'naabhi' put the 3 feet point there and hold it there firmly by left hand now move round the right hand with the 6 feet point over left hand and place it at a**

point 3 inches up and 3 inches left to the 'naabhi' and tight it as much as you can by pulling both hands in opposite directions now check there should be no shrink in the edge of the vasthram tightened around the body (now is the tricky job which is a little hard to practice and it is little more hard for persons who have bunch of hairs all over the body) now slightly curl (out) the top edge of the vasthram where holding by left hand keep hold of it do not allow to go loose while curling

   

(it is nothing but as like as wearing a 'kaili / lungi') then do slightly curl by right hand as did by left hand, now your left hand will get free and move it some small distance towards your back and curl there (I hope you got the idea)yes, curl all over the edges the curl of the vasthram should be very slim as much as you can to get the required tightness now check, where the top of the curled vasthram and move it down to the circle, 4 inches below the 'naabhi' or at 'low hib'

    

now you will have two edges, the left side will be samll and inner, the right side will be long and outer take the inner left edge to your left hand and fold it to 4 inches breath along the edge (if you want to bueatify the fold: insert it at any point in the front curl and straighten the folds by holding the top and next folds it in a straight posistion by left hand and deeply pressing at the fold edge by right hand, do it repeatedly for all the successive folds by adding one by one) send the folded vasthram between the two legs to the back side and insert it in the curl of the vasthram at the center of the back check there should be no twist in the folds now put the bottom edge of the vastram at the tip of the left leg on the floor and put the big leg finger on it to hold it



collect the loose cloth between two thighs and shrink and twist at one point by which the vastram should get tight arround the 'jatty' insert this twisted end at the front curls center and leave the vastram below the left leg big finger now come to the other right end of the vasthram and fold it along the length wise about five to six inches breath and insert the folds above the previously inserted position



now catch the remaining one corner of vastram which is hanging straightly below the insertion and take it up and make some folds on it then insert this fold also at the same place.This is the completion of wearing 'Pancha Kachcham'.



Fold the Uthriyam or samll veshti as shown and tie it around the hip. Now bring the poonal to usual place.

## ஜனனம் மற்றும் மரணத்தினால் ஏற்படும் தீட்டு விளக்கங்கள்

ஒரு ஆணுக்கு பிறக்கும் ஆண் குழந்தைகள், அந்த ஆண் குழந்தைகளுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகள் என வரிசையாக வரும் சந்ததியில் ஏற்படும் அனைத்துக் கிளைகளிலும் உள்ள ஆண்கள் அனைவரும் பங்காளிகள் எனப்படுவர். மூல புருஷன் எனப்படும் ஒரு ஆண் வழியாக தோன்றும் மகன்-பேரன்-கொள்ளுப்பேரன்-எள்ளுப்பேரன் எள்ளுப்பேரனுக்கு மகன் - எள்ளுப்பேரனுக்குப் பேரன் வரையில் மூல புருஷனையும் சேர்த்து 7 தலைமுறைகள் ஆகின்றது. இதற்குள் அடங்கும் அத்தனை பங்காளிகளில் யாராவது ஒருவர் இல்லத்தில் ஏற்படும் பிறப்பினாலும் (ஜனனத்தாலும்) அல்லது இறப்பினாலும் (மரணத்தாலும்) அனைவருக்கும் தீட்டு உண்டாகும்.

தீட்டுக் காலத்திலும் கண்டிப்பாக சந்தியாவந்தனம் பண்ணவேண்டும். காயத்திரி எண்ணிக்கை மட்டும் 10 காயத்திரியுடன் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

மற்ற காம்யமான ஜபங்கள் கிடையாது.

தாய் வழியாகவும் சில தீட்டுகள் ஏற்படும். தீட்டு பற்றிய விஷயங்களுக்கு மூல ஆதாரம் "வைத்யநாத தீக்ஷிதீயம் ஆசௌச காண்டம்" ஆகும். இங்கு மிகவும் சுலபமான முறையில் தீட்டு விஷயங்கள் விளக்கப் படுகிறது. மிகவும் நுணுக்கமான விஷயங்களை அறிய ஒரு நாள் அவகாசத்துடன் ஈமெயில் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

### தீட்டு என்றால் என்ன? என்று கூட சிலர் கேட்கிறார்கள்.

தீட்டுக் காரியங்கள் நடக்கும் இடத்தின் மற்றும் பொருடக்களின் சம்மந்தம் ஆன்மீகம் மற்றும் விஜ்ஞான ரீதியாகவும் விலக்கத் தக்கது என்பது கருத்து. ஆன்மீகம் தீட்டு என்று சொல்லி விலகி நிற்கச் சொல்கிறது. விஜ்ஞானம் ஹைஜீனிக் என்று சொல்லி விலகி நிற்கச் சொல்கிறது.

எனவே ஆன்மீக ரீதியாக யார் யார் எவ்வளவு நாட்கள் பிறரிடமிருந்தும், வழக்கமான மேம்பாட்டு வழிமுறைகள் நெறிமுறைகளிலிருந்தும் சில காரணங்களை உத்தேசித்து விலகி நிற்கச் சொல்கிறது.

உறவைக் கொண்டு அவர்களின் விலகி நிற்கவேண்டிய கால அளவை வெகு அழகாக நிச்சயித்துள்ளார்கள்

உறவு உள்ள அளவிற்கு எங்களுக்கு நெருக்கமில்லை நாங்கள் ஏன் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்? என்று சிலர் கேட்கிறார்கள்.
சென்னை போன்ற பெரு நகரங்களில் கார் செல்லும் வழி, மோட்டார் சைக்கிள் செல்லும் வழி, பஸ் செல்லும் வழி, கனரக வாகனங்கள் செல்லும் வழி, நடந்து செல்லும் வழி என பாதையைப் பகுத்து வைத்து இந்தந்த பாதையில் செல்வோர் இன்னின்ன வேகத்தில் செல்ல வேண்டும் என்று நிர்ணயம் செய்துள்ளார்கள். நடந்து செல்பவன் காரில் செல்பவன் நடைபாதையில் சென்று கொண்டு நான் நடந்து செல்லவில்லையாதலால் எனக்கு அந்தவிதி பொருந்தாது என்று கூறி அவனுடைய வேகத்திற்குச் செல்லமுடியாது.
அதுபோல, இந்த உறவு இருப்பவர்களுக்கு இந்த அளவு நெருக்கம் இருக்கும் இருக்கவேண்டும் என்பது பொது விதி. அப்படி நெருக்கம் இல்லாதது விதிசெய்தவன் குற்றமல்ல. இதுபோன்ற விதிவிலக்குகளுக்காக வேண்டி விதியை மாற்றி அமைக்க முடியாது. எனவே (உறவு முறையில்) நெருக்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உறவுமுறையுடன் பிறந்து தொலைத்த காரணம் கருதி விதிப்படி அநுட்டிப்பதே விவேகமாகும்.

பங்காளிகளில் யார் ஒருவர் இறந்தாலும் 7 தலை முறைகளுக்கு உட்பட்ட அனைத்து ஆண்கள் மற்றும் அவர்கள் மனைவிகளுக்கும் 10 நாள் தீட்டு உண்டு.

பிறந்து பத்து நாட்களே ஆன புருஷ (ஆண்)குழந்தை இறந்தால் கீழ்க்கண்டவர்களுக்கு பத்து நாள் தீட்டு.

- இறந்தவர் (குழந்தை)யின் தந்தை
- தாய், மற்றும் மணமான ஸஹோதரார்கள்

மேற்படி இறந்தது மணமாகாத ஒரு பெண் (குழந்தை) ஆனாலும் மேற்கண்ட அனைவருக்கும் 10 நாள் தீட்டு.

7 வயதுடைய உபநயனம் ஆன பையன் இறந்தால் பங்காளிகள் அனைவருக்கும் 10 நாள் தீட்டு.

7 வயதுக்கு மேல் இறந்தது ஆண் ஆனால் உபநயனம் ஆகியிருந்தாலும் இல்லாவிட்டாலும் பங்காளிகள் அனைவருக்கும் 10 நாள் தீட்டு

கீழ்க்கண்ட உறவினர்களின் மரணத்தில் ஆண்களுக்கும் அவர்களுடைய மனைவிகளுக்கும் 3 நாள் தீட்டு.

1. தாயின் தந்தை (மாதாமஹர்)
2. தாயின் தாய் (மாதாமஹி)
3. தாயின் ஸஹோதரன் (மாதுலன்)
4. மாமன் மனைவி (மாதுலானி)
5. மாமனார்
6. மாமியார்
7. தாயின் உடன் பிறந்த ஸஹோதரி (சித்தி,பெரியம்மா)
8. தந்தையின் ஸஹோதரிகள் (அத்தைகள்)
9. ஸஹோதரியின் மகன் (உபநயனமானவன்)மருமான்
10. உபநயனமான பெண்வயிற்றுப் பேரன்(தௌஹித்ரன்)
11. ஏழு தலைமுறைக்கு மேற்பட்ட பங்காளிகள் (ஸமானோதகர்கள்)
12. கல்யாணமான பெண்
13. கல்யாணமான ஸஹோதரி
14. ஸ்வீகாரம் போனவனைப் பெற்றவள் (ஜனனீ)
15. ஸ்வீகாரம் போனவனை ஈன்ற தந்தை (ஜனக பிதா)
16. ஸ்வீகாரம் போன மகன் (தத்புத்ரன்)
17. 7 வயதுக்கு மேற்பட்ட கல்யாணமாகாத பங்காளிகளின் பெண்.
18. 2 வயதுக்கு மேற்பட்ட ஆனால் உபயநயனமாகாத பங்காளிகளின் ஆண் பிள்ளைகள்.

    7 தலைமுறைக்கு மேற்பட்ட பங்காளிகள்.

பெண்களின் கீழ்க்கண்ட உறவினரின் மரணத்தில் அவளுக்கு மட்டும் 3 நாள் தீட்டு:

1- உபநயனமான உடன்பிறந்த ஸஹோதரன்
2- உபநயனமான மருமான் (ஸஹோரதன் பிள்ளை)
3- உபநயனமான ஸஹோதரியின் பிள்ளை

இளைய அல்லது மூத்த தாயார் (தந்தையின் வேறு மனைவிகள்)

பக்ஷிணீ என்பது இரண்டு பகலும் ஓர் இரவும் அல்லது இரண்டு இரவும் ஒரு பகலும் கொண்ட நேரம். பகலின் அல்லது இரவின் கடைசீ பகுதியில் அறியப்பட்டாலும் அந்த பொழுது தீட்டில் கழிந்துவிட்டதாகவே பொருள்.

கீழ்கண்ட பட்டியலில் உள்ளவர்களின் மரணத்தினால் பெண்களுக்கு பக்ஷிணீ தீட்டு. (ஒன்றரை நாள்)

1. தந்தையுடன் பிறந்த பெரியப்பா, சித்தப்பா
2. தாயுடன் பிறந்த சித்தி, பெரியம்மா
3. தாயின் ஸஹோதரர்கள் (மாதுலன்)
4. தந்தையின் ஸஹோதரிகள் (அத்தை)
5. மேல் நான்கு வகையினரின் பெண்கள், பிள்ளைகள்
6. தந்தையின் தந்தை - பிதாமஹன்
7. தந்தையின் தாய் - பிதாமஹி
8. தாயின் தந்தை - மாதாமஹன்
9. தாயின் தாய் - மாதாமஹி
10. உடன் பிறந்த ஸஹோதரி
11. ஸஹோதரியின் பெண்கள்

மருமாள் (ஸஹோதரனின் பெண்)

கீழ்கண்டவர்கள் உபநயனமான ஆண், விவாஹமான பெண் மரணத்தால் பெண்களுக்கு மட்டும் 1 நாள் தீட்டு

1. தாயின் மூத்தாள் அல்லது இளையாள் (ஸபத்னீ மாதா)குமாரன்
2. ஸபத்னீ மாதா புத்ரீ (குமாரத்தி)
3. ஸபத்னீமாதா ஸஹோதர, ஸஹோதரிகள்
4. ஸபத்னீமாதா பிள்ளையின் பிள்ளை, பெண்
5. ஸபத்னீ மாதா பெண்ணின் பிள்ளை, பெண்
6. ஸபத்னீமாதா ஸஹோதரியின் பிள்ளை,பெண்

கீழ்க்கண்ட உறவினர்களின் மரணத்தில் ஆண்களுக்கும் அவர்களுடைய மனைவிகளுக்கும் 3 நாள் தீட்டு.

1. தாயின் தந்தை (மாதாமஹர்)
2. தாயின் தாய் (மாதாமஹி)
3. தாயின் ஸஹோதரன் (மாதுலன்)
4. மாமன் மனைவி (மாதுலானி)
5. மாமனார்
6. மாமியார்
7. தாயின் உடன் பிறந்த ஸஹோதரி (சித்தி,பெரியம்மா)
8. தந்தையின் ஸஹோதரிகள் (அத்தைகள்)
9. ஸஹோதரியின் மகன் (உபநயனமானவன்)மருமான்
10. உபநயனமான பெண்வயிற்றுப் பேரன்(தௌஹித்ரன்)
11. ஏழு தலைமுறைக்கு மேற்பட்ட பங்காளிகள் (ஸமானோதகர்கள்)
12. கல்யாணமான பெண்
13. கல்யாணமான ஸஹோதரி
14. ஸ்வீகாரம் போனவனைப் பெற்றவள் (ஜனனீ)
15. ஸ்வீகாரம் போனவனை ஈன்ற தந்தை (ஜனக பிதா)
16. ஸ்வீகாரம் போன மகன் (தத்புத்ரன்)
17. 7 வயதுக்கு மேற்பட்ட கல்யாணமாகாத பங்காளிகளின் பெண்.
18. 2 வயதுக்கு மேற்பட்ட ஆனால் உபயநயனமாகாத பங்காளிகளின் ஆண் பிள்ளைகள்.

7 தலைமுறைக்கு மேற்பட்ட பங்காளிகள்.

பெண்களின் கீழ்க்கண்ட உறவினரின் மரணத்தில் அவளுக்கு மட்டும் 3 நாள் தீட்டு

1. உபநயனமான உடன்பிறந்த ஸஹோதரன்
2. உபநயனமான மருமான் (ஸஹோரதன் பிள்ளை)
3. உபநயனமான ஸஹோதரியின் பிள்ளை

இளைய அல்லது மூத்த தாயார் (தந்தையின் வேறு மனைவிகள்)

பக்ஷிணீ என்பது இரண்டு பகலும் ஓர் இரவும் அல்லது இரண்டு இரவும் ஒரு பகலும் கொண்ட நேரம். பகலின் அல்லது இரவின் கடைசீ பகுதியில் அறியப்பட்டாலும் அந்த பொழுது தீட்டில் கழிந்துவிட்டதாகவே பொருள்.

கீழ்கண்ட பட்டியலில் உள்ளவர்களின் மரணத்தினால் பெண்களுக்கு பக்ஷிணீ தீட்டு. (ஒன்றரை நாள்)

1. தந்தையுடன் பிறந்த பெரியப்பா, சித்தப்பா
2. தாயுடன் பிறந்த சித்தி, பெரியம்மா
3. தாயின் ஸஹோதரர்கள் (மாதுலன்)
4. தந்தையின் ஸஹோதரிகள் (அத்தை)
5. மேல் நான்கு வகையினரின் பெண்கள், பிள்ளைகள்
6. தந்தையின் தந்தை - பிதாமஹன்
7. தந்தையின் தாய் - பிதாமஹி
8. தாயின் தந்தை - மாதாமஹன்
9. தாயின் தாய் - மாதாமஹி
10. உடன் பிறந்த ஸஹோதரி
11. ஸஹோதரியின் பெண்கள்

மருமாள் (ஸஹோதரனின் பெண்)

கீழ்கண்டவர்கள் உபநயனமான ஆண், விவாஹமான பெண் மரணத்தால் பெண்களுக்கு மட்டும் 1 நாள் தீட்டு.

1..தாயின் மூத்தாள் அல்லது இளையாள் (ஸபத்னீ மாதா)குமாரன்
2.ஸபத்னீ மாதா புத்ரீ (குமாரத்தி)
3.ஸபத்னீமாதா ஸஹோதர, ஸஹோதரிகள்
4.ஸபத்னீமாதா பிள்ளையின் பிள்ளை, பெண்
5.ஸபத்னீ மாதா பெண்ணின் பிள்ளை, பெண்
6.ஸபத்னீமாதா ஸஹோதரியின் பிள்ளை,பெண்

பெண்களுக்கு திருமணத்தின் மூலம் கோத்திரம் வேறு படுகிறது. கணவனின் கோத்திரத்தை (சந்ததியைச்) சேர்ந்தவர்களின் பிறப்பு இறப்பே அவளுக்கும் உரியதாகும். ஆயினும் பிறந்தகத்தைச் சேர்ந்த சிலரது மரணத்தினால் பெண்களுக்கு மட்டும் 3 நாள் வரை தீட்டு சம்பவிக்கும் இந்த தீட்டு அவர்களுடைய கணவருக்குக் கிடையாது. தூரமான ஸ்த்ரீ தனித்திருந்து தீட்டுக் காப்பது போல இதை அவள் மட்டும் காக்க வேண்டியது.

## பெண்களின் கீழ்க்கண்ட உறவினரின் மரணத்தில் அவளுக்கு மட்டும் 3 நாள் தீட்டு:

1. உபநயனமான உடன்பிறந்த ஸஹோதரன்
2. உபநயனமான மருமான் (ஸஹோரதன் பிள்ளை)
3. உபநயனமான ஸஹோதரியின் பிள்ளை

## இளைய அல்லது மூத்த தாயார் (தந்தையின் வேறு மனைவிகள்)

பக்ஷிணீ என்பது இரண்டு பகலும் ஓர் இரவும் அல்லது இரண்டு இரவும் ஒரு பகலும் கொண்ட நேரம். பகலின் அல்லது இரவின் கடைசீ பகுதியில் அறியப்பட்டாலும் அந்த பொழுது தீட்டில் கழிந்துவிட்டதாகவே பொருள்.

## கீழ்கண்ட பட்டியலில் உள்ளவர்களின் மரணத்தினால் பெண்களுக்கு பக்ஷிணீ தீட்டு. (ஒன்றரை நாள்)

1. தந்தையுடன் பிறந்த பெரியப்பா, சித்தப்பா
2. தாயுடன் பிறந்த சித்தி, பெரியம்மா
3. தாயின் ஸஹோதரர்கள் (மாதுலன்)
4. தந்தையின் ஸஹோதரிகள் (அத்தை)
5. மேல் நான்கு வகையினரின் பெண்கள், பிள்ளைகள்
6. தந்தையின் தந்தை - பிதாமஹன்
7. தந்தையின் தாய் - பிதாமஹி
8. தாயின் தந்தை - மாதாமஹன்
9. தாயின் தாய் - மாதாமஹி
10. உடன் பிறந்த ஸஹோதரி
11. ஸஹோதரியின் பெண்கள்

மருமாள் (ஸஹோதரனின் பெண்)

## கீழ்கண்டவர்கள் உபநயனமான ஆண், விவாஹமான பெண் மரணத்தால் பெண்களுக்கு மட்டும் 1 நாள் தீட்டு

1. தாயின் மூத்தாள் அல்லது இளையாள் (ஸபத்னீ மாதா)குமாரன்
2. ஸபத்னீ மாதா புத்ரீ (குமாரத்தி)
3. ஸபத்னீமாதா ஸஹோதர, ஸஹோதரிகள்
4. ஸபத்னீமாதா பிள்ளையின் பிள்ளை, பெண்
5. ஸபத்னீ மாதா பெண்ணின் பிள்ளை, பெண்
6. ஸபத்னீமாதா ஸஹோதரியின் பிள்ளை,பெண

பக்ஷிணீ என்பது இரண்டு பகலும் ஓர் இரவும் அல்லது இரண்டு இரவும் ஒரு பகலும் கொண்ட நேரம். பகலின் அல்லது இரவின் கடைசீ பகுதியில் அறியப்பட்டாலும் அந்த பொழுது தீட்டில் கழிந்துவிட்டதாகவே பொருள். பகலில் அறியப்பட்டு பகல், இரவு, மறுநாள் பகலில் தீட்டு முடிந்துவிட்டாலும் மறுநாள் காலையிலேயே ஸ்னானத்திற்குப் பிறகு தீட்டுப் போகும்.

கீழ்கண்ட பட்டியலில் உள்ளவர்களின் மரணத்தினால் ஆண்களுக்கு பக்ஷிணீ தீட்டு. (ஒன்றரை நாள்).

1. அத்தையின் பிள்ளை அல்லது பெண்
2. மாமனின் பிள்ளை அல்லது பெண்
3. தாயின் ஸஹோதரியின் பெண்கள்-பிள்ளைகள்
4. தன்னுடைய ஸஹோதரியின் பெண்
5. தன் ஸஹோதரனின் மணமான பெண்
6. சிற்றப்பன், பெரியப்பன் பெண்கள்
7. தன் பிள்ளை வயிற்றுப் பேத்தி (பௌத்ரீ)
8. பெண் வயிற்றுப் பேத்தி (தௌஹித்ரி)
9. உபநயனமாகாத பெண் வயிற்றுப் பிள்ளை (தௌஹித்ரன்)
10. உபநயனமாகாத மருமான் (ஸஹோதரி புத்ரன்)

கீழ்க்கண்டோர் மரணத்தில் புருஷர்களுக்கு ஒரு நாள் தீட்டு. (இளைய, மூத்தாள் தாயார்களுக்கு ஸபத்னீ மாதா என்று பெயர்).

1. ஸபத்னீ மாதாவின் ஸஹோதரன், ஸஹோதரி
2. ஸபத்னீ மாதாவின் பெண் மற்றும் மேற்சொன்ன 3வகை உறவினரின் பெண்கள் பிள்ளைகள்.
3. ஸபத்னீ மாதாவின் தாய், தந்தை
4. ஸபத்னீ மாதாவின் பெரியப்பா, சித்தப்பா
5. கல்யாணமாகாத 6 வயதுக்குட்பட்ட (2 வயதுக்கு மேற்பட்ட) பங்காளிகளின் பெண்.
6. ஸ்வீகாரம் சென்ற ஆணின் பிறந்தகத்தில் உடன் பிறந்த (முன் கோத்ர) ஸஹோதரர்கள்
7. ஆறு மாதத்திற்கு மேற்பட்ட இரண்டு வயதிற்குட்பட்ட பங்காளிகளின் ஆண் குழந்தை.
8. குழந்தையில்லாத மனைவி இறந்தபின் அவளைப் பெற்றவர்கள் மாமனார் மாமியார் இறந்தால்.

- பங்காளிகளைப் பொறுத்தவரையில் ஒரு தீட்டு காத்துக் கொண்டிருக்கும்போது மற்றொரு தீட்டு வந்தால் முன் வந்த தீட்டு முடியும்போது பின் வந்த தீட்டும் முடிந்துவிடும்.
- உதாரணமாக 10நாள் தீட்டில் 4ம் நாள் மற்றொரு 10 நாள் தீட்டு வந்தால் முன் வந்த தீட்டின் 10ம் நாளுடன் பின் வந்த தீட்டும் முடிந்துவிடும்.
- ஆனால் முன் வந்த 3 நாள் தீட்டுடன் பின் வந்த 10 நாள் தீட்டு முடியாது.
- பத்துநாள் தீட்டின் இடையில் வந்த 3 நாள் தீட்டுடன் 10 நாள் தீட்டு முடியாது. 10ம் நாள்தான் சுத்தி.
- பத்தாம் நாள் இரவில் வந்த புதிய பத்து நாள் தீட்டிற்கு அதிகப்படியாக 3நாள் மட்டும் காத்தால் போதும்.
- ஆனால் பிறப்புத் தீட்டின் இறுதியில் வரும் பிறப்புத் தீட்டிற்காக மேலும் 3 நாள் காக்கத் தேவையில்லை.
- மரணத் தீட்டு ஜனனத் தீட்டைக் காட்டிலும் பலம்
- மரணத் தீட்டின்போது வந்த பிறப்புத் தீட்டு மரணத் தீட்டுடன் முடியும்.
- பெற்ற குழந்தை பத்துநாள் பிறப்புத் தீட்டிற்குள் இறந்தால் அதற்காகத் தனியாகத் தீட்டில்லை. பிறந்ததிலிருந்து 10 நாள் விலகும். ஒரு வேளை 10ம் நாள் மரணமானால் மேலும் 2 நாள் அதிகரிக்கும். 10ம் நாள் இரவு ஆனால் 3 நாள்.
- பங்காளிகளுக்கு மேற்படி 3 நாள் தீட்டில்லை.
- அதிக்ராந்தாசௌசம் என்பது தீட்டுக்காலம் முடிந்தபின் தீட்டுப்பற்றி அறிந்தவருக்கு விதிக்கப்படுவது.
- பிறப்புத் தீட்டில் அதிக்ராந்தாசௌசம் இல்லை.
- பத்து நாள் தீட்டை பத்தாம் நாளுக்குமேல் 3 மாதங்களுக்குள் கேட்டால் 3 நாள் தீட்டு.
- மூன்று மாதத்திற்கு மேல் 6 மாதத்திற்குள் கேட்டால் ஒன்றரை நாள்.
- 6 மாதத்திற்கு மேல் ஒரு வருடத்திற்குள் ஒரு நாள்.
- அதன் பிறகு ஸ்னானம் மாத்திரம்.
- 3 நாள் தீட்டை பத்து நாட்களுக்குள் கேட்டால் 3நாள் தீட்டு. பத்து நாட்களுக்குப் பிறகு ஸ்னானம் மாத்திரம்.
- 1 நாள் தீட்டுக்கு அதிக்ராந்த ஆசௌசம் கிடையாது.
- மாதா பிதாக்களின் மரணத்தில் புத்திரர்களுக்கும், கணவனனின் மரணத்தில் பத்தினிக்கும் எப்போது கேட்டாலும் அதிலிருந்து 10 நாள் தீட்டு உண்டு.

சில தீட்டின் முடிவில் புருஷர் (ஆண்)களுக்கு ஸர்வாங்க க்ஷவரம் (வபனம்) செய்து கொண்டால்தான் தீட்டுப் போகும் என்பது சாஸ்திரம். ஸர்வாங்கம் என்பது :

- தலையில் சிகை (குடுமி) தவிர்த்த மற்ற இடம்
- முகம், கழுத்து
- இரு கைகளிலும் மணிக்கட்டிலிருந்து முழங்கைக்குக் கீழ் உள்ள ஒரு சாண் இடம் தவிர்த்து மற்ற இடம்.
- கழுத்துக்கீழே பாதங்கள் வரை, பிறப்புறுப்பு உட்பட பின் முதுகு தவிர்த்த மற்ற அனைத்து இடங்களிலும் உள்ள ரோமங்களை அறவே அகற்றுவது ஸர்வாங்க க்ஷவரம் ஆகும்.

கீழ்கண்ட மரண தீட்டுகளின் முடிவில் (முடிகின்ற நாள் அன்று - அதாவது பத்து நாள் தீட்டில் 10ம் நாள் காலை) ஸர்வாங்கம் அவசியம்.

1. இறந்த பங்காளி தன்னைவிட வயதில் பெரியவரானால். வயதில் சிறியவர்களுக்கு வபனம் தேவையில்லை ஆனால் தர்பணம் உண்டு.
2. மாதாமஹன், மாதாமஹீ, மாமன், மாமி, மாமனார், மாமியார் இவர்கள் மரணணத்தில் வனம் உண்டு.
3. இறந்தவர் பெரியவரா இல்லையா என ஸந்தேஹம் இருந்தால் வபனம் செய்து கொள்வதே சிறந்தது.
4. தீட்டு முடியும் தினம் வெள்ளிக் கிழமையானால் முதல்நாளான வியாழக் கிழமையிலேயே வபனம் செய்து கொள்ள வேண்டும். எக்காரணத்தாலும் வெள்ளிக்கிழமை க்ஷவரம் செய்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

1. தீட்டுள்ளவன் வீட்டில் தீட்டற்றவன் தெரிந்து சாப்பிட்டால் அன்றையபொழுது அவனுக்குத் தீட்டு.
2. தீட்டுப்போகும் தினத்தில் சுமார் காலை எட்டரை மணிக்கு (ஸங்கவ காலம்) மேல்தான் தீர்த்தமாடி தீட்டை முடிக்க வேண்டும்.
3. பிறப்பு, இறப்பு, மாதவிடாய் (தூரம்) இவை சூர்ய உதயத்திற்கு பதினொன்றேகால் நாழிகை(270 நிமிடங்கள்)க்கு முன் ஏற்பட்டால் முதல் நாள் கணக்கு. அதன் பிறகானால் மறுநாள் கணக்கு.
4. ப்ரேதத்தின் பின் போனாலும் க்ஷவரம் செய்து கொண்டாலும் இரு முறை ஸ்நானம் செய்ய் வேண்டும்.
5. ஸந்யாசிகளுக்கு (முன் ஆச்ரம) மாதா, பிதாக்களின் மரணத்தில் மட்டும் ஸ்நாநம்.
6. 88 அடிகளுக்குள் பிணம் (சவம்) இருந்தால், எடுக்கும்வரை, சமைப்பது, சாப்பிடுவது கூடாது.
7. ஸந்யாசியின் சவமானால் அந்தப் பகுதிக்கே தீட்டுக் கிடையாது.

8. நகரங்களுக்கு மேற்படி தோஷங்கள் எதுவுமில்லை.
9. ஸ்நானம் பண்ணமுடியாத அளவிற்கு நோயுள்ள தீட்டுகாரனின் தீட்டுப்போக வேண்டுமானால், தீட்டற்ற ஒருவன் தீட்டுள்ளவனைத் தொட்டுவிட்டு தீர்த்தமாடி பின் தொட்டு தீர்த்தமாடி என பத்து முறை தீர்த்மாடவேண்டும்.
10. அதுபோல் நோயுள்ள தூர ஸ்த்ரீயை மற்றொருத்தி 12 முறை தொட்டு தீர்த்தமாடி வேறு உடை உடுத்தச் செய்தால் சுத்தி. இரண்டிலும் புண்யாஹவாசனம் முக்கியம்.

## தீட்டில்லாத காலங்கள்

1. ச்ராத்தத்தின் நடுவில் (ச்ராத்த சங்கல்பம் ஆனபின்) தீட்டுத் தெரிந்தால் ச்ராத்தம் முடியும்வரை கர்த்தாவுக்குத் தீட்டில்லை.
2. வரித்தபின் போக்தா (ச்ராத்த ஸ்வாமி)க்கு தீட்டுத் தெரிந்தால் சாப்பிட்டு முடியும்வரை தீட்டில்லை.
3. விவாஹத்தில் உத்வாஹ சங்கல்பத்தின் பின் தீட்டுத் தெரிந்தால் சேஷ ஹோமம் வரை தீட்டில்லை.
4. ஸந்யாசிகளின் மரணத்தினால் அவரின் பங்காளிகளக்குத் தீட்டில்லை, அவப்ருத ஸ்நாநம் மட்டும்.

## மற்ற சில கவனிக்கத் தக்கவை

- ராஜாங்கத்தால் கொலை தண்டனை விதிக்கப்பட்டவனுக்கு உடனே கர்மா செய்யலாம்.
- துர் மரணம் செய்து கொண்டவனுக்கு 6 மாதம் கழித்து கர்மா செய்ய வேண்டும் என்பது விதி ஆயினும் 24 நாட்கள் கழித்து செய்வது என்றும் ஒரு விதி உள்ளது.
- தற்செயலாய் துர்மரணம் அடைவோருக்கு தீட்டு, தர்பணம் முதலியவை உண்டு.
- தற்கொலை செய்துகொண்டவனுக்கு தீட்டு, தர்பணம் இவை இல்லை.
- கர்மா செய்பவனுக்கு 11ம் நாள் கர்மாவிற்குப் பின் தீட்டுப் போகும்.
- கல்யாணமான பெண் இறந்தால் அவள் பிறந்த வீட்டுப் பங்காளிகளுக்கு தீட்டில்லை.
- பிறப்புத் தீட்டுள்ளவனை 4 நாளைக்கு மேல் தீண்டினால் அதிகம் தோஷமில்லை.
- ஒரு தீட்டுக் காரன் மற்றொரு தீட்டுக்காரனைத் தொடக் கூடாது.
- தீட்டுள்ளவன் வீட்டுக்கும் அவன் சாமான்களுக்கும் தீட்டுண்டு.
- பிரம்மச்சாரிகள் கர்மா செய்தால் அதனுடன் தர்பணம் (உதகதானம்) தனியாக இல்லை.

- மனைவி கர்பமாக இருக்கும்போது தானம் வாங்குதல், தூரதேச யாத்திரை போதல் கூடாது.
- சவத்துக்கு முன்னாலும், பக்கவாட்டிலும் போகக் கூடாது.
- சஞ்சயனம் ஆனபின் துக்கம் விசாரித்தால் ஆசமனம் மட்டும் போதும்.
- சிராத்த தினத்தன்று துக்கம் விசாரிக்கச் செல்லக் கூடாது.
- தன் மனைவி கர்பமாய் இருக்கும்போது தாய், தந்தை தவிர மற்றவர்களின் சவத்தை சுமக்கலாகாது.
- ப்ரம்மச்சாரிகள் தாய் தந்தை சவத்தைத் தவிர மற்வர்கள் சவத்தைச் சுமக்கக்கூடாது.
- தீட்டுக் காரர்கள் ஆலயத்திற்குள் செல்லக் கூடாது.
- தீட்டுக்காரர்களை தீட்டில்லாதவர்கள் நமஸ்கரிக்கக் கூடாது. தீட்டுக்காரரும் அப்படியே.
- ஜனன, மரண தீட்டிலும் ஏகாதசி, துவாதசி விரதம் விடக் கூடாது. உபவாஸம் மட்டும், பூஜை கிடையாது.
- சாவு தீட்டுக்காரர் மெத்தை போன்றவற்றில் படுக்கக் கூடாது. தினமும் தீர்த்தமாடவேண்டும்.
- சிசுக்கள் இறந்தால் புதைத்த தினம் முதல்தான் தீட்டு